RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2244

OPEN ACCESS

# வள்ளலாரின் பார்வையில் திருவருட்பா காட்டும் அறநெறிக் கருத்துக்கள்

த. கோமதி [அ, *], வீ. தனலெட்சுமி [அ]

[அ] தமிழாய்வுத்துறை, தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி, பெரம்பலூர்-621220, தமிழ்நாடு, இந்தியா.

# Moral Views of Thiruvarutpa from Vallalar's Point of View

**T. Gomathi [a, *], V. Dhanalakshmi [a]**

[a] Department of Tamil, Thanthai Hans Roever College, Perambalur-621210, Tamil Nadu, India

* Corresponding Author: gomathisiva82@gmail.com

Received: 24-05-2022
Revised: 13-07-2022
Accepted: 25-07-2022
Published: 26-08-2022

**ABSTRACT**

Ramalinga Adigalar is credited with giving clarity and simplicity to Tamil poetry, which has been rich for more than 20 centuries and brought about a positive turn in the last century. It guides mankind to be completely liberated from suffering without getting buried in religion and philosophy. Vallalar's divine policy was in a manner that alleviated the sufferings of the poor and needy. It was aimed at freeing people from superstition. His religious policy was neither blind nor crude. His doctrine of God arising out of the practice of Saivam led him to the path of pure righteousness and guided him. The purpose of this article is to examine from Vallalar's point of view how Thiruvarutpa directs mankind to live with dignity without enmity and to rise to become great men.

**Keywords:** Ramalinga Adigalar, Thiruvarutpa, Moral, Religious Policy

## முன்னுரை

இறைவன் மீது நம்பிக்கை கொண்டவர் வள்ளலார். தம்முடைய வாழ்நாள் முழுவதும் அறத்தையே மையமாகக் கொண்ட ஒரு தனிப்பாதையை உருவாக்கி அதில் வெற்றி கண்டவர். வைணவ அடியார்கள் சிவனை வழிபட்டுப் பாடுவதும் இல்லை. சிவனடியார்கள் திருமாலை வழிப்பட்டுப் பாடுவதும் இல்லை. இராமலிங்க அடிகளாரின் சமரசம் போற்றிய நெஞ்சமே முதன் முதலில் அந்த வழக்கத்தைக் கடந்து உயர்ந்தது. ஸ்ரீராமநாமத் திருப்பதிப்பகம் ஸ்ரீவீரராகவபெருமாள் போற்றி திருபஞ்சாங்கம், இலக்குமி தோத்திரம் ஆகியவற்றை அவருடைய அருட்பாவில் காணலாம். மதியால் இறையருளைப் பெற வேண்டும். அதன் துணையால் ஊழை வெல்ல வேண்டும் என அறிவுறுத்துகின்றார். உள்ளத்தில் இருக்கும் கள்ளத்தை நீக்கி ஒளிவடிவான இறைவனைக் காணுமாறு பாடுகிறார். ஏறக்குறைய எல்லாப் பாடல்களும் சமரசம், சீவகாருணியம் ஆகிய இரண்டு அடிப்படை அறங்களைப் போற்றும் வகையில் அமைந்துள்ளன. இதனை வள்ளலாரின் திருவருட்பாவில் ஆய்ந்து எடுத்துரைப்பது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## வள்ளலார் காட்டும் அறநெறியும் அறவாழ்வும்

இன்றைய மனிதச் சமுதாயத்தில் தெய்வப் பக்தி எத்தனை உள்ளங்களில் இருக்கிறது என்று ஆராய்ந்து பார்க்கிறபோது, வாழ்வில் சோதனைகள் வரும்போதும் துன்பத்தில் துடிக்கும் போதும் அமைதியின்றி அலையும்போதும் கவலையினால் கண்ணீர் சிந்தும் போதும் மட்டும் மனிதன் தெய்வத்தை நினைக்கிறான். தனது துயரங்களை இறைவனிடம் முறையிடுகிறான். எண்ணியபடி தனது

எண்ணம் நிறைவேறவில்லையெனில் அவநம்பிக்கை கொள்கிறான். வாழ்வில் வசதி காலத்தில் இறைவனை நினைப்பதில்லை. ஆடம்பர வாழ்வில் அவன் செய்யும் கொடைகள் வெளிஉலகம் தன்செயல்களை அறிந்து தன்னைப் புகழ வேண்டும் என்ற தன்னலச் சிந்தனையின் வெளிப்பாடாக இருந்து வருகின்றான்.

இறைவன் விரும்புவது தூயமனம். வள்ளலார் வழியில் நீதியும் நேர்மையும் கொண்டு அன்புப் பண்பில் மனிதகுலம் நிலைத்திருக்க வேண்டும். இறைவனின் அருளைப் பெறுவதற்கு அறமே துணையாக நிற்கவல்லது என்பது வள்ளலரின் கொள்கை. இறைவன் உயிர்களைத் தெளிவிப்பதற்கு அறத்தைக் கருவியாகக் கொண்டு நிற்கிறான் என்பதைப் பின்வரும் பாடல்கள் உணர்த்துகின்றன.

"அறம் உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி"

அறப்பெற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

அறக்கணம் வகுத்த அருட்பெருஞ்ஜோதி"

என இறைவனை அறக்கடல் என்று உருவகித்தல் காண்கிறோம் (Vallalar, 1999). மேலும் அறத்தை இறைவனுக்கு நிகராக வைத்துப் போற்றியுள்ளார். அவ்வகையில்,

"அறங்காதல் செய்தோனை ஆண்டு கொண்டிங்கே

அருட்பெருஞ் சோதியாய் ஆளும் அழகர்" (Vallalar, 1999)

## இராமலிங்க அடிகளார் அருளிய சன்மார்க்க நெறிகள்

ஆதியும் அந்தமும் அகிலம் முழுவதும் நிறைந்து எல்லோருக்கும் எல்லாமுமாய், எல்லாவற்றிலும் நிறைவாய் நிலைத்திருப்பவன் இறைவன். அவனின்றி ஓர் அணுவும் அசைவதில்லை. உடலாய், உயிராய், உள்ளத்தின் உணர்வாய், அறிவாய், பொருளாய் அனைத்திற்கும் முதலாய் இருக்கும் எல்லாம் வல்ல கடவுளைத் தொழாது, உலகில் எதுவும்முழுமை பெறுவதில்லை. ஆண்டவனின் திருவடிகளைப் பணிந்து தொழ மறந்த சான்றோர் எவருமில்லை.

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்

நிலன்மிசை நீடு வாழ்வார்"

எனும் குறட்பாவில் அன்புள்ள மனங்களில் உறைபவனை தொழுதலின் அவசியம் விளக்கப்படுகிறது (Varatharasan, 1991).

பாரில் சிறந்த சிவயோக பூமியாக வடவேங்கடம் - தென்குமரியை எல்லையாகக் கொண்டத் தமிழகத்தில் தெய்வத்தின் உண்மை நெறி உணராத உலக மக்களுக்கு உண்மைக் கடவுள் ஒருவரே என்பதை உணர்த்துவித்து, நன்னெறிபடுத்தி, சாதிமத பேதம் தவிர்த்து சமரசத்தை நாட்டில் நிலைநாட்டவும், ஆன்மநேய ஒருமைபாட்டை வெளியெங்கும் பவனி வரச் செய்யவும், வள்ளல் பெருமானாகிய இராமலிங்கர் மாபெரும் இயக்கமாகிய சமரச சுத்த சன்மார்க்கம் என்னும் அமைப்பை 1865 ல் தொடங்கினார். இதன்மூலம், கடவுள் ஒருவரே "அவர் அருட்பெருஞ்சோதி" சாதி, சமய, பேதம் கூடாது. உயிர்க்கொலையும் புலால் புசிப்பும் தவிர்த்தலும் ஏழைகளின் பசி தவிர்த்தலாகிய ஜீவகாருண்யமும் சன்மார்க்க சங்கக் கொள்கைகள் ஆகும்.

## இரக்க வடிவமானவர் இறைவன்

இளமையில் முருகன்பால் உளம் உருகி இவர் பாடிய பக்திப் பாடல்கள் அனைத்தையும் ஆறுதிருமுறைகளாக வகுத்து அவற்றை 'திருவட்பா' என வழங்குகின்றனர். இவரது பாடல்கள் தோத்திர முறையைத் தழுவியவை. எளிமை நிறைந்தவை, இனிமை மிகுந்தவை, கல்நெஞ்சையும் கனிவிக்கும் ஆற்றல் படைத்தவை, அன்பிற்கு எளியவராகும் ஆண்டவனைப் பற்றி,

“அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே!

அன்பெனும் குடில்புகும் அரசே!

அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே!

அன்பெனும் கரத்தமர் அமுதே!

அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே!

அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே!

அன்பெனும் அணுவுள் அமைந்த பேர் ஒளியே!

அன்புருவாம் பர சிவமே!”

என்னும் வரிகளில் அடிகளாரின் அருள் உள்ளத்தை நாம் பார்க்க முடிகிறது (Vallalar, 1999). எனக்கு முக்தி பெறவேண்டும் என்ற இச்சை இல்லை. உலகத்து உயிர்கெல்லாம் இன்பம் செய்வது என் இச்சையாம், எந்தையே என்று இறைவனிடம் விண்ணப்பம் செய்கிறார். பிள்ளைச்சிறு விண்ணப்பம், பிள்ளைபெறு விண்ணப்பம் என்ற இரு பகுதிகளில் அவருடைய தூய உள்ளம் - இரக்கமே வடிவான உள்ளம் புலப்படுகிறது.

அவர் சென்னை மாநகரில் பல ஆண்டுகள் வாழ்ந்தார், நகர மக்களின் ஆடம்பர வாழ்வும் ஆரவாரமும் அவருக்கு வெறுப்பையே தந்தன. எளிய வெள்ளை ஆடையை உடுத்தி, எல்லாம் துறந்த பற்றற்ற உள்ளத்தோடு, மிக எளிய வாழ்க்கை நடத்தினார். சாதி வேறுபாடு இல்லாத பெருநிலையை எல்லோருக்கும் பெற்றுத்தர ஏங்கி இறைவனிடம் முறையிட்டார்.

பாடும் பாட்டெல்லாம் கடவுளின் அருளைப் புகழ்ந்து பாடும் பாட்டாக இருக்க வேண்டும். மற்ற பொருள் பற்றி எல்லாம் பாடுவதில் பயன் இல்லை என்பது அவர் கொள்கை.

“அம்பலப் பாட்டே அருட்பாட்டு

அல்லாதர் பாட்டெல்லாம் மருட்பாட்டு” (Vallalar, 1999)

“நடராசர் பாட்டே நறும் பாட்டு

ஞாலத்தார் பாட்டெல்லாம் வெறும்பாட்டு”

தாம் பெற்ற இன்பத்தை இந்த உலகத்தாரும் பெற வேண்டும் என்ற ஆசையாலேயே தம் அனுபவங்களைப் பாட்டில் வடித்துத் தருவதாகக் கூறுகிறார் (Sivagnanam, 2019).

“ஏன் உரைத்தேன் இரக்கத்தால் எடுத்துரைத்தேன் கண்டீர்

யான் அடையும் சுகத்தினை நீர் தான் அடைதல் குறித்தே”

எனப்பாடுகிறார் (Muthuveerappan, 2010).

உயிர்க் கொலையையும் புலைப்பசியும் உடையவர்கள் எல்லாம் உறவினத்தார் அல்லர் அவர் புறவினத்தார் என்று பாடியவர்.

“கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும்

கண்மூடி வழக்கமெல்லாம் மண் மூடி போக”

எனக் கண்டித்தவர் இறைவனிடம் வேண்டும் அருள் உள்ளத்தைப் பாருங்கள் (Sivagnanam, 2019).

“அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்

ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செய்ய வேண்டும்” (Arunachalam, 1980)

“வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்”

என்ற இரக்க உணரர்வையும் அடிகளாரின் பார்வையில் காணமுடிகிறது (Ilankumaran, 2008).

## நிலையாமை

மனித உடல் அழியக்கூடிய என்றும் மரணத்தீர்ப்பு மாற்ற முடியாதது என்றும் குறிப்பிடும் வள்ளலார் கூற்றுவன் வருமுன்னர் ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்றுமாறு உணர்த்துவதை அறிய முடிகின்றது. ஆணவம் தலைதூக்கி நிற்கும் வரை நிலையாமை உணர்வு தோன்றாது. நிலையாமை உணர்வு தோன்றாத வரை மனம் அறவழிச் செல்ல ஆர்வம் காட்டாது. அதே மனம் கூற்றத்தின் உண்மையை உணரத் தொடங்கினால் மனம் இயல்பாகவே அறத்தின் வழி சார்ந்து நிற்கும்

“சேற்றாசை யொடு காமச் சேற்றாசைப்

படுவாரைத் துணிந்து கொல்லக்

கூற்றாசைப் படும்எனநான் கூறுகின்றதுண்மை”

என்கிறார் (Varatharasan, 1991).

சங்க இலக்கியங்கள் உயிர், உடல், இளமை போன்றவை நிலையில்லாதது எனச் சுட்டுகின்றன. நிலைத்து வாழ்வோம் என நம்பவேண்டாம் இவ்வுண்மையை வள்ளுவரும்,

“நில்லாதவற்றை நிலையின என்றுணரும்

புல்லறி வாண்மை கடை”

என்று எடுத்துரைத்துள்ளார் (Varatharasan, 1991). இளமைப்பருவம் நிலைத்திடும் என்று நீ நினைத்தால் அது உன் அறியாமையாகும். அது பொய், உண்மையாயின் உன் தாயின் இளமை எங்கே? என்று வினா தொடுத்துள்ளார். ஒரு காலத்தில் இளமையாக இருந்த காளையர்கள் இன்று கிழவர்களாக மாறிய நிலைமையினையும் இளமை இழந்து கூன் பெற்றுக் கோலை நிலத்தில் ஊன்றி நடப்பவர்களாகின்றனர். இவர்கள் யாவரும் மரணத்தை எதிர்பார்திருப்பது யாவரும் அறிந்த ஒன்றாகும். இக்கருத்தினைக் குறிபிட்டு வள்ளலார் இளமை அழியும் தன்மையுடையது என்பதை

மனதில் கொண்டு இப்பிறவியில் நன்மை செய்ய வேண்டும் என உணர்த்தியுள்ளார்.

உடல் அழியும் இத்தகைய உடல் இரத்தமும் சதையும் சேர்ந்த பிண்டமாகும். உடல் மீது ஆசை வைத்தலைத் தவிர்த்தல் வேண்டும் என்றும், இறந்த உடலைச் சுடுகாட்டிற்கு எடுத்து சென்று உறவினரும், சுற்றத்தாரும், பொது மக்களும், தீயிட்டு அழித்து விடுதலையும் காணலாம். ஆகையால் பொய்யான உடல் மீது ஆசை வைத்து அலைதலைத் தவிர்ப்பாயாக என்று வள்ளல் பெருமான் அறிவுறுத்தியுள்ளார்.

## பொருளில் பற்றின்மை

வெற்றாடை துறவியாக வலம் வந்த இராமலிங்கனார் உள்ளத் தூய்மையுடனும், உயர்ந்த ஒழுக்க நெறியையும் கடைபிடித்து மக்கள் மனதில் நிறைந்து நின்றார். அருட்பெருஞ் சோதி அருட்பெருஞ்சோதிதனிப்பெருங் கருணை அருட்பெருஞ்சோதி என்ற புனிதமான முழக்கம் அவருடைய திருவாயிலிருந்து வெளிப்பட்டுப் பரவத் தொடங்கியது. மேலும், பணத்தின் மீதும், ஆடம்பரத்தின்மீதும் பற்றில்லாதவராகவும், தமக்கு உதவிசெய்ய வலிய வரும் செல்வந்தர்களைப் புறகக்கணிப்பவராகவும் விளங்கினார். மிகை அன்பினால் வற்புறுத்தித் தரும் பொருட்களைஆற்றிலேயும் கிணற்றிலேயும் எறிந்து விடுவார். இதனை,

“அருளினை அளிக்கும் அப்பனே உலகில்

அன்புளார் வலிந்தெனக் கீந்த

பொருளினை வாங்கிப் போனபோ தெல்லாம்

புழுங்கிய புழுக்கம்நீ அறிவாய்

மருளும்அப் பொருளைச் சாகத் தெறிந்து

மனமிக இளைத்ததும் பொருளால்

இருளுறும் எனநான் உளம்நடுங் கியதும்

எந்தைநின் திருவுளம் அறியும்”

என்று பாடுவதால் உணரலாம் (Ilankumaran, 2008). மேலும், உடையிலும் எளிமையையே விரும்பினார்.

## பிற உயிர்களை நேசித்தல்

கருணையே வடிவாகத் திகழ்ந்த வள்ளலார் பிற உயிர்களின் நலத்திற்காகவே தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர். இதனை,

“எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்

தம்முயிர்போல் எண்ணி உள்ளே

ஒத்துரிமை உடையவரால் உவக்கின்றார்

யாவர் அவர் உளந்தான்

சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்

இடம்என நான் தெரிந்தேன் அந்த

வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்

சிந்தனைமிக விழைந்த தாலோ” (Ilankumaran, 2008)

## புலால் உண்ணாமை

இன்றைய உலகில் கடவுளுக்கு உயிர்பலி இடுகின்ற வழக்கம் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே இருக்கிறது. குறிப்பாகச் சிறுதெய்வ வழிபாட்டில் தான் இவ்வுயிர்ப்பலி அதிகமாக இருக்கின்றது. இவற்றையெல்லாம் கண்ட வள்ளலார் மிகுந்த துன்பமும் வேதனையும் அடைந்தார். மனிதனை மிருகமாக்கிவிட்ட புலால் உண்ணும் பழக்கத்தை அடியோடு வெறுத்தார். சாதி சமய ஒருமைப் பாட்டுக்குச் சன்மார்க்க சங்கம் கண்ட வள்ளலார், புலால் உண்பவர்களை புறவினத்தார் என்றும், புலால் உண்ணாதவர்களை அகவினத்தார் என்னும் வேறுபடுத்துகின்றார். புலால் உண்ணும் மக்களைக் கண்டு மயங்கி உள்ளம் நடுங்கி ஆற்றாமல் எலும்பெல்லாம் கருக இளைத்தேன் என்று வருந்துகிறார். புலால் உண்பதற்கு முக்கியக் காரணமாக இருப்பது உயிர்ப்பலி. அவ்வுயிர்ப்பலியிடும் சிறுதெய்வ வழிபாடு கூடாது என்கிறார் வள்ளலார். இதனை,

“சிறுதெய்வ நெறி செல்லும் மானிடப் பேய்கள்பால்

சேராமை எனக்கு அருள்வாய்”

என்ற வரிகளால் எடுத்தியம்புகிறார் (Selvarani, 2010).

## சாதியை வெறுத்தல்

ஒருவர் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்பது பிறப்பினால் வராது. அவர் செய்யும் செயலாலே வரும். இதனை வள்ளுவர்,

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா

செய்தொழில் வேற்றுமை யான"

என்ற குறளில் சுட்டுகிறார் (Varatharasan, 1991). சாதிய சமய வேறுபாடில்லாமல் தம்முயிர் போல் பிற உயிர்களையும் கருதி, அன்பு காட்டி உதட்டளவிலின்றி உள்ளத்தாலும் ஒருமைப்பாட்டினை விரும்புகின்ற உத்தமர் எவரோ, அவருடைய திருவுள்ளமே இறைவன் நடம்புரியும் இடம் என்றும், அத்தகைய வித்தகச் சித்தர்களுக்குத் தொண்டு செய்ய தம் உள்ளம் விரும்புவதாகவும் கூறுகின்றார். ஒவ்வொரு ஆன்மாவையும் பரம்பொருளின் அம்சமாகவே கருதினார். இறைவன் படைத்த உயிர்களனைத்தையும் சமமாகவே மதித்தார். இதனை,

"மண்ணுல கத்திலே உயிர்கள்தாம் வருந்தும்

வருத்தத்தை ஒருசிறி தெனினும்

கண்ணுறப் பார்த்துஞ் செவியுறக் கேட்டும்

கணமுநான் சகித்திட மாட்டேன்"

என்று மனம் கசிந்துருகி பாடியுள்ளார் (Ilankumaran, 2008).

## முடிவுரை

இறைவனை ஒளிவடிவில் கண்டவள்ளலாரின் படைப்பான திருவருட்பாவில் ஏறக்குறைய எல்லாப் பாடல்களும் சமரசம், சீவகாருணியம் ஆகிய இரண்டு அடிப்படை அறங்களைப் போற்றும் வகையில் அமைந்துள்ளன. இறைவனின் அருளைப் பெறுவதற்கு அறமே துணையாக நிற்கவல்லது என்பது வள்ளலரின் கொள்கை. இறைவன் உயிர்களைத் தெளிவிப்பதற்கு அறத்தைக் கருவியாகக் கொண்டு நிற்கிறான் என்பதை அவரது பல பாடல்கள் உணர்த்துகின்றன. சாதி வேறுபாடு களைந்து, புலால் தவிர்த்து, இரக்க உணர்வுகொண்டு, அனைத்து உயிர்களிடத்தும் அன்பு காட்டுவதோடு பொருளில் பற்றில்லாமல் ஆசைகளை அறுத்து, நிலையாமை உணர்ந்து இறைவன் மிது பற்றுக்கொள்ளவும் அறிவுறுத்தி நன்னெறிப்படுத்தியுள்ளார். இவ்வாறு வள்ளலார் மக்கள் தம் வாழ்வில்; பின்பற்ற வேண்டிய அறநெறிக்கருத்துக்களைத் திருவருட்பாவில் சுட்டிக்காட்டியுள்ளார் என்பது நோக்கத்தக்கது.

## References

Arunachalam, K., (1980) Vallalar Valvum Thathuvamum, Sarvodaya Ilakkiya Pannai, Madurai, India.

Ilankumaran, R., (2008) Vallalar Kanda Sagaakalai Allathu Maranamila Peruvalvum, Tamilmann Pathippagam, Chennai, India.

Muthuveerappan, Pazha, (2010) Vallalarin Panmuga Padaipukal, Annamalai University, Chennai, India.

Selvarani, P. S., (2010) Vallalarin Valvum Vakkum, Sri Senbaga pathippagam, Chennai, India.

Sivagnanam, M, P., (2019) Vallalar Kanda Orumaippadu, Varthamanan Pathippagam, Chennai, India.

Vallalar, (1999) Thiruarutpa Aaram Thirumurai, Arulperunjothi Agavalpa, Kadaloor, India.

Varatharasan, M., (1991) Thirukkural Thalivurai, The South India Saiva Siddhanda Works Publishing Society, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License